Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம 10

ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

பதிப்பு எண்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 2 ஆம் நாள் துல்கஃதா 29 (15-5-61) திங்கட்கிழமை இதழ் 77

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவுகிறது

நேற்றைய அரசாங்க அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஞாயிறு

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுவாக அமைதி நிலவுகிறது. பாதுகாப்புப் படைகள் வழக்கம்போல் ரோந்து சுற்றிவருகின்றன" என பாதுகாப்பு — வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார். எவ்வித அசம்பாவிதமும் இல்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

வெள்ளிக்கிழமை நகரசபை விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் விசேஷ கூட்டமொன்றை மாநகரசபைக் கமிஷனர் வருகிற வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கூட்டுகிறார். இவ்விசேஷ கூட்டம் மேயரினதும் ஸ்தலஸ்தாபனக் கமிஷனரதும் அறிவித்தலின் பேரிலேயே கூட்டப்படுவதாக அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'அதிகாரக் கையளிப்புச் சம்பந்தமாக ஆலோசிப்பதற்காகவே' இவ்விசேஷ கூட்டம் கூட்டப்படுகிறது. மாநகரசபை விதிகளின்படி சபைக் கூட்டங்களைக் கூட்டும் அதிகாரம் மேயருக்குத்தான் உண்டு. அப்படி மேயர் இல்லாத இடத்து சபைக் கூட்டங்களைக் கூட்ட வேண்டுமென்றால் சபைக்கோ மேயருக்கோ அன்றிக் கமிஷனருக்கோ அதிகாரம் கையளிக்கப்படல் வேண்டும். சபை தனது அதிகாரங்களை மேயருக்கோ கமிஷனருக்கோ அன்றி ஓர் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கோதான் கையளிக்கலாம். மேயர் சபையின் சம்மதத்துடன் தனது அதிகாரங்களைக் கமிஷனருக்கோ அன்றி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கோதான் கையளிக்கலாம். ஆனால் சபையினால் மேயருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மேயர் எவருக்கும் கையளிக்க முடியாது. ஆனால் கமிஷனருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை அவர் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவருக்குக் கையளிக்கலாம்எனத் தெரிகிறது.

மாநகரசபையின் விதிகளின்படி கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதைத் தவிர்ந்த இதோடு சம்பந்தப்பட்ட மற்றைய அதிகாரங்கள் எதுவும் உதவி மேயருக்கு இல்லையென்று தெரியவருகிறது.

மேயர் இங்கில்லாதபடியால் சபையின் நடவடிக்கைகள் பாதிக்கப்படாதிருக்கவே குறிப்பிட்ட விசேஷ கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிகிறது. இக்கூட்டத்தில் அதிகாரக் கையளிப்புச் சம்பந்தமாக ஆலோசிக்கப்படும்.

இக்கூட்டம் விசேஷ கூட்டமாக இருப்பதால் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருக்கும். அதிகாரக் கையளிப்பு சம்பந்தமாக ஆலோசித்தல் என்ற விஷயத்தைத் தவிர வேறு எவ்விஷயமும் இதில் இடம் பெற அனுமதிக்கப்படமாட்டாதென ஓர் அதிகாரி தெரிவித்தார்.

செய்திச் சுருக்கம்

1959-ம் ஆண்டில் இந்தியாவில் 1683 புதிய கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

∴ ∴ ∴

தேச எல்லைபற்றி குறுகிய மனோபாவம் ஒழியவேண்டுமென்றும் சகலரும் சர்வதேசிய ரீதியில் சிந்திக்கவேண்டுமென்றும் நேருஜி பூனாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

100 வயதான டாக்டர் விஸ்வேஸ்வரையாவின் தேகநிலை மோசமாய் இருப்பதாகக்கூறப்படுகிறது.

228 பேர் மாண்டனர்

டாக்கா, மே 14

கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட புயலினால் இதுவரை மாண்டவர்களின் தொகை 228 என அறிவிக்கப்படுகிறது. 98பேரைப் பற்றித் தகவலில்லை.

வெல்ல உற்பத்தியாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 21, 22, 23-ந் தேதிகளில் வட இந்தியாவிலுள்ள இராஜஸ்தான் என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் அகில இந்திய பனை வெல்ல உற்பத்தியாளர் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அகில இலங்கை காந்தீய சேவா சங்கப் பொதுக் காரியதரிசி திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை நாளை விமான மூலம் இந்தியா புறப்படுகிறார்.

இந்திய கதர் கிராம கைத்தொழில் கமிஷனின் அழைப்பின் பேரிலேயே இவர் முக்கியவிருந்தாளியாக அங்கு செல்கிறார். இம்மகாநாடுமுடிவுற்றதும் பனை வெல்ல உற்பத்திசம்பந்தமாக இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும் அவர் விஜயம் செய்வாரெனத் தெரிகிறது.

பேதிக்கு 204 பேர் பலி

கல்கத்தா, மே 14

கல்கத்தாவில் பேதி நோய் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் நகரில் உள்ள பல்வேறு ஆஸ்பத்திரிகளில் 2084 பேர் பேதியால் பீடிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 204 பேர் இறந்துவிட்டனர்.

நீரில் மூழ்காமல் மூவரை காப்பாற்றிய பெண்

பிறர் எச்சரித்தும் அஞ்சாமல் உதவிசெய்ய விரைந்தார்

பொல்காவளை, ஞாயிறு

நிக்கவெரட்டியாவைச் சேர்ந்த மகல்வேவா குளத்தில் மூழ்கும் அபாயத்திலிருந்த மூன்று ஆண்களை சோமிநோனா என்ற 28 வயதுப் பெண் காப்பாற்றினார்.

மேற்கண்ட மூவரும் படகு ஒன்றில் உல்லாசமாகச் சென்றுகொண்டிருந்தபோது குளத்தின் நடுவில் அது தலைபுரண்டதால், இந்த ஆண்கள் கஷ்டமடைந்தனர்.

இச்சம்பவத்தை ஆண்களில் பலர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் ஒருவராவது உதவி செய்ய முன்வரவில்லை.

குளத்தில் குளித்துக்கொண்டிருந்த சோமி நோனா என்ற அந்தப்பெண் பிறர்எச்சரித்தும் பயப்படாமல் மற்றொரு படகில் ஏறி நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களின் அருகே அதை இட்டுச் சென்றார். அவர்கள் அதில் ஏறிக்கொண்டு பத்திரமாகக் கரைதப்பினர்.

கொழும்பு-அனுராதபுரம் விமான சேவை

அனுராதபுரம், ஞாயிறு

வெள்ளிக்கிழமை காலை ஏர்சிலோன் புதிய விமான சேவை அனுராதரம், திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கு நடத்தப்படும். அதே வழியில் மீண்டும் கொழும்புக்கு விமானம் திரும்பும்.

வார இறுதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் திரும்பவும் அதே வழியிலும் விமான சேவை நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விமானம் செல்லும்.

வருடம் 40 கோடிக்கு கதர் விற்பனை

புதுடில்லி, மே 14

வருடம் ஒன்றுக்கு 40 கோடி ரூபாய்க்கு கதர் விற்பனை செய்ய வேண்டுமென்று கதர் நிர்வாக போர்டு கமிஷன் தீர்மானித்திருக்கிறது.

நஞ்சுத் திராவகம் அருந்தி வாலிபர் தற்கொலை

மனைவி அளித்த உருக்கமான சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

சிறிய தகப்பனார் தனக்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல்செய்த மனத்தாங்கலினாலும் சிறிய தகப்பனாரைத் தான் கத்தியால் குத்திய துக்கத்தினாலும் ஒரு வாலிபர் நச்சுத் திராவகம் அருந்தி தனது உயிரை மாய்த்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது. அச்செழுவைச்சேர்ந்த வல்லி அப்பாத்துரை (வயது 26) யே தற்கொலைசெய்த அவ்வாலிபர்.

வல்லி அப்பாத்துரையின் மனைவி சின்னம்மா (வயது 20) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"இறந்தவரை நான் ஆறு வருடங்களுக்குமுன் மணம் செய்துகொண்டேன். எங்களுக்கு மூன்று பிள்ளைகள் உளர். இப்பொழுது நான் 6 மாதக் கர்ப்பவதியாகும். எனது கணவர் கள்ளிறக்கும் தொழிலாளி. மல்லாகம் நீதிமன்றத்தில் எனது கணவர் இரண்டு வழக்குகளில் சிக்கியிருக்கிறார். ஒன்று தீவைத்ததற்கான ஒரு வழக்கு. அதில் அவர் ஒரு வருட நன்னடைத்தையில் விடப்பட்டார். மற்றொன்று அவரது சிறியதகப்பனாரைக் கத்தியால் குத்தியதால் அவரால் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும். இந்த வழக்கு விசாரணை வருகிற 6ந் தேதிக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறிய தகப்பனாரைக் குத்திய துக்கத்தினாலும் சிறியதகப்பனார் தனக்கெதிராக வழக்கைத் தாக்கல் செய்திருந்த மனத்தாங்கலினாலும் அவர் சில நாட்களாக நிம்மதியற்றிருந்தார். கடந்த 11ம்தேதி நானும் எனது கணவரும் புன்னாலைக் கட்டுவனில் ஓர் திருமணத்துக்குச் சென்றோம். 12ம் தேதி காலை என்னை அவ்விடத்தில் விட்டுவிட்டு அச்செழுவுக்குச் சென்று கள்ளிறக்கிவிட்டு திரும்பவும் புன்னாலைக்கட்டுவனுக்கு வந்தார். வரும்பொழுது அவரது தகப்பனாருக்கு 2 போத்தல் கள்ளும் கொண்டு வந்தார். மாலை 4 மணிக்குதான் பின்தொடர்ந்து வருவதாகக்கூறி, என்னை அச்செழுவுக்குப்போகுமாறு சொன்னார். ஆனால் அவர் என்னைத் தொடர்ந்து வராததையறிந்து சிறிது நேரத்தின்பின் நான் அங்கு திரும்பிச் சென்றேன். அங்குசென்றதும் அவர்கள் அவர் என்னுடன் சென்று விட்டதாகக் கூறினார்கள். நான் திரும்பிச்சென்று அவரது வருகைக்காக காத்திருந்தேன். இரவு 7 மணிக்கு குடிவெறியுடன் வந்தார். 'பிள்ளை, பிள்ளை' என்று அழைத்துக்கொண்டு வருவதைக் கேட்டதும் நான் அங்கு சென்றேன். தனது இடுப்புக்குள் சொருகியிருந்த சிறு போத்தலை எடுத்து ஏதோ பருகிவிட்டுப் போத்தலை தரையில் வீசினார். "நான் பொலிடோல் குடித்துவிட்டேன்; இருக்க மாட்டேன்; என் பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்" என்று என்னிடம் கூறினார். இதன்பின் தனது மாமனாரிடம் ஓடிச்சென்று மடியில் விழுந்துகொண்டே 'எனது மனைவியையும் பிள்ளைகளையும் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று கூறி மடிந்துவிட்டார்.

இவ்விஷயம் அடுத்த நாள் காலையிலேயே கிராமாதிகாரிக்கும் பொலிசுக்கும் அறிவிக்கப்பட்டது. கோப்பாய் பொலிசார் சாட்சியங்களை பதிவு செய்தனர்.

இறந்தவருடைய தகப்பனாரதும் மற்றும் சிலரினதும் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டன.

இதனை விசாரணைசெய்த திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்

போர்மோஸாவில் யு. எஸ். உபஜனாதிபதி

தைப்பே, மே 14

அமெரிக்க உபஜனாதிபதி திரு. லின்டன்ஜான்ஸன் போர்மோஸா அதிபர் மார்ஷல் சியாங்கை-ஷேக்குடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொருட்டு இங்குவந்துசேர்ந்தார்.

மணிவாக்கு

மகிழ்ச்சியும் உழைப்பும் ஆயுளை விருத்தி செய்யும்.

—ஓர் அறிஞர்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 2 உ (15-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

லாவோஸில் அரசியல்,

ராணுவ தீர்வுக்கு ஏற்பாடு

திரைமறைவில் கிருஷ்ணமேனன் எடுத்துவரும் தீவிர முயற்சி

ஜெனிவா, மே 14

லாவோஸில் அரசியல், ராணுவ தீர்ப்பு ஒன்றைக் காண்பதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு முயற்சிகளுக்கும் திரு. கிருஷ்ணமேனன் திரைமறைவில் பெரிய சக்தியாய் விளங்கி வருவதாக மேற்கு நாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லாவோஸின் 3 தரப்பு பிரதிநிதிகளும் ராணுவ, அரசியல் தீர்வுக்கு பேச்சு வார்த்தை நடத்துவதாயும், இது வெற்றிகரமாக முடியுமானால் அங்கு ஒரு கலப்பு அரசாங்கம் ஏற்படுவதற்கு வழி ஏற்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று 3 தரப்புப் பிரதிநிதிகளும் போர் நிறுத்த ஏற்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவை இரண்டு முறை சந்தித்தார். அதன் பின் பிரிட்டிஷ், கனடா, பர்மா வெளிநாட்டு மந்திரிகளையும் கண்டு பேசினர். திரு. மேனன் சீனவெளிநாட்டு மந்திரி திரு. சென்-யீ ஐயும் சந்தித்தார்.

சீன வெளிநாட்டு மந்திரி திரு. சென்—யீ பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஹியும் பிரபுவைச் சந்தித்தார். ஹியும் பிரபு சோவியத் வெளிவிவகார மந்திரி குரோமிகோவைச் சந்தித்தார்.

இதற்கிடையில் லாவோஸில் தலையிடுவதாய் அமெரிக்கா மீது சீனவெளிநாட்டு மந்திரி திரு. சென்யீ குற்றஞ் சாட்டினார். அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் இக் குற்றச்சாட்டை மறுத்தார். பதட்லாவோ படைகளுக்கு ரஷ்யா இன்றும் ஆயுத உதவி அளித்து வருவதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாய் அமெரிக்கா அறிவித்தது.

கம்போடியா பிரதமர் நாரோடம் சிஹோனக் செவ்வாய்க்கிழமை ஜெனிவா போய்ச் சேர்வார்.

இளம் குற்றவாளிகளுக்கு புனர் வாழ்வு

இளம் குற்றவாளிகளைக் காப்பாற்றி அவர்களை நல்வழியிற் செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் சென்ற ஐந்து வருட காலமாக மிகுந்த சிரத்தை எடுத்து வருகின்றது. அதுமாத்திரமன்றி அதற்கான நிர்வாகத்தை ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வந்திருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கதாகும்.

இளம் குற்றவாளிகளுக்கான பள்ளிக்கூடங்களையும் பயிற்சி நிலையங்களையும் அரசினர் அமைத்திருப்பதுடன், அவர்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையையும் அப் பள்ளிக்கூடங்களில் காணமுடிகின்றது.

இளம் குற்றவாளிகளை மேற்பார்வை செய்து அவர்களைப் பயிற்றுவதற்கான அதிகாரிகளை அரசினர் மிகுந்த கவனத்துடன் நியமித்திருக்கின்றனர். இந்த அதிகாரிகளுக்குக் காலத்துக்குக்காலம் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி வகுப்புகளையும் அரசினர் ஏற்படுத்துவதுண்டு. சமீபத்தில் இத்தகைய பயிற்சி வகுப்பு ஒன்றினை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. இது பதினாறாவது பயிற்சி வகுப்பாகும். இளம் குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதுடன் நில்லாது, அதன் பின்னரும் அந்த அதிகாரிகளுக்குப் புதிய புதிய யோசனைகளைக் கூறி அவர்களை உற்சாகப்படுத்துவதிலிருந்து அரசாங்கம் இத்துறையில் எவ்வளவு அக்கறை காட்டி வருகின்றதென்பது நன்கு புலனாகிறது.

எந்த ஒரு தொழிலுக்கும் அத்துறையில் உண்மையான ஆர்வம் உள்ளவர்களையே அமர்த்தல் வேண்டும். அதிலும் இளம் குற்றவாளிகளைப் பொறுத்தவரையில் அவர்களைப் பக்குவமாகப் பேணுவது அவசியமாகும். குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கு குழந்தை உள்ளம் வேண்டும். அதேபோன்று பாலியக் குற்றவாளிகளுடன் பழகி அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையையும் மலர்ச்சியையும் உண்டாக்குவதற்கு அவர்களின் உளப்பாங்கை உணர்ந்து கொள்ளும் பண்பு ஒருவரிடம் அமைதல் அவசியம்.

மேனாடுகளில் இதற்கான விசேஷ பயிற்சி அளிப்பதற்குப் பயிற்சி நிலயங்கள் பல இருக்கின்றன. இளம் குற்றவாளிகளின் தன்மையை உணரக் கூடிய ஆற்றலும் அவர்களின் மன நிலையைப் பரிவுடன் கவனிக்கக் கூடிய மனப் பக்குவமும் நிறைந்தவர்களே இளம் குற்றவாளிகளை நல்வழிப்படுத்தக் கூடியவர்கள் எனலாம். இளம் குற்றவாளிகளுடன் ஊடாடுபவர்கள் கருணை உள்ளம் பூண்டவர்களாய் இருப்பதுடன் அவர்களின் உணர்ச்சிகளை மதித்து நடப்பவர்களாயும் இருத்தல் அவசியமாகும். இந்தப் பண்புகள் இல்லாத அதிகாரிகளால் பெருநன்மை ஏற்படுவதற்குப் பதிலாகத் தீமைகள் உண்டாகி விடுவது இயல்பு. ஆகவே, தான் இளம்குற்றவாளிகளுக்கானபயிற்சிநிலையங்களைப் பொறுப்பேற்று நடாத்துபவர்கள் தங்கள் கடமையைப் புனிதமான ஒரு பணியாகக் கருதி ஒழுக வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

சமூகத்துக்கு உதவாதெனக் கருதப்படும் ஒரு குழந்தை சனமார்க்க நெறியிற் காப்பாற்றப்படுமாயின் அது நாட்டுக்குத்தான் நன்மை விளைவிப்பதாகும். அரசாங்கம் இதனை உணர்ந்து இளம் குற்றவாளிகளின் புனர் வாழ்வில் சிரத்தைகொண்டு உழைத்து வருவது நாட்டின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பதாகுமென்றே கூற வேண்டும்.

புதையுண்டிருந்த சோழர் காலத் தேர்

திருப்பதி, மே 14

திருமலையின் வட, கிழக்கு மாட வீதிகள் சந்திக்குமிடத்தில், பூமிக்கடியிலிருந்து 'கல் தேர்" ஒன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

நான்கு சக்கரங்கள் மீது மண்டபம்போன்ற ஒரு அமைப்புடன் கூடிய இந்தப் பிரமாண்டமான அற்புத கல்தேர், சந்திர சோழ ராஜகாலத்தைச் சேர்ந்தது என, நம்பப்படுகிறது.

ரூ 50,000 மதிப்புள்ளபருத்தி தீக்கிரையானது

நாக்பூர், மே 14

பருத்திப் பண்டகசாலையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக சுமார் ரூ. 50,000 மதிப்பிடத்தக்க பருத்திகள் தீக்கிரையானது.

நெருப்பை அணைப்பதில் தீயணைப்புப் படை, சுமார் இரண்டு மணி நேரம் போராடியதாகத் தெரிகிறது:

தவறணைகளை மாநகரசபைக்கு ஒப்படைக்கவும்

கொழும்பு, மே 14

கொழும்பிலுள்ள சாராயத் தவறணைகளைகொழும்பு மாநகரசபை எடுத்து நடத்தவேண்டும்" என்ற பிரேரணையை எதிர்வரும் மாநகரசபைக் கூட்டத்தில் திரு. டி. எஸ். மல்லவராய்ச்சி சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது.

தவறணைச் சொந்தக்காரர்கள் செலுத்தும் தொகையை மாநகரசபையும் அரசாங்கத்துக்குச் செலுத்துவதானால், அரசாங்கம் தனது வருமானத்தைச் சிறிதேனும் இழந்துவிடாது என்று திரு. மல்லவராச்சியின் பிரேரணையிலிருந்து தெரியவருகிறது.

சேமிப்பு வங்கி அதிபர் பதவி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை சேமிப்பு வங்கி அதிபர் திரு. வெஸ்லி கூரேக்கு எதிராக திரு. எட்மெண்ட் சமரக்கொடி பிரதிநிதிகள் சபையில் சாட்டிய குற்றச்சாட்டை விசாரணை செய்யும் பொருட்டு, அதுவரை அப்பதவிக்கு திரு. எஸ். டி. எஸ். டி' எஸ். தெனுவாரா நியமிக்கப்பட்டுள்ளார்.

சாப்புச் சட்டத்தில் மாறுதல்

கொழும்பு, ஞாயிறு

கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய இடங்களிலுள்ள கடைகள் சீக்கிரம் காலை 10மணிமுதல் மாலை 7 மணி வரை திறக்கப்படுவதற்கேற்ப சாப்புச் சட்ட விதிகள் திருத்தப்படும். பரீட்சார்த்தமாகமேற்கொள்ளப்படும் இந்த ஏற்பாடு வெற்றிகரமாய் இருக்கும் பட்சத்தில் கோட்டை உள்ளிட்டு இதர பகுதிகளுக்கும் புதிய சட்டம் விஸ்தரிக்கப்படும்.

ஹோட்டல் அறையில் ஒருவர் மரணம்

அநுராதபுரம், மே 14

நீர்ப்பாசனப் பகுதி "என்ஜினியரிங்" காரியாலயத்தைச் சேர்ந்த படம் வரைபவரான திரு. எம். எம். ர்ஹிர் முக்தார் என்பவர் டியத்தலாவிலுள்ள ஹோட்டல் அறையொன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

பரிசோதித்துப்பார்த்ததில் இவரது பிரயாணப் பையில், அதிகமான நித்திரைமாத்திரைகள் இருக்கக் காணப்பட்டது.

இவர்மரணம்பற்றி இதுவரை எந்த விதமானதகவலும் கிடைக்கவில்லை.

பாரததுருப்புகளுக்கு தடை நீக்கம்

வியப்போல்ட்விலி மே 14

வடகடாங்காவிலுள்ள காமினி விமான தளத்தில் பாரத துருப்புகளுக்கெதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க கடாங்கா அதிகாரிகள் இணங்கியுள்ளனர்.

மாயமாய் வந்த தார்ப்பீப்பாக்கள்

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு பட்டின சபை எல்லைக்குள் 50 தார்ப்பீப்பாக்கள் இருந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தப் பீப்பாக்கள் பட்டின சபையின் எவருடைய அனுமதியுமின்றி எல்லைக்குள் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது

இதைத் தொடர்ந்து இரு மெம்பர்கள், கண்டனம் தெரிவித்து தங்களது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

பிரபல திரைநட்சத்திரம் மறைவு

ஹொலிவுட், மே 14

ஹொலிவுட் திரைவானில் கடந்த 30 ஆண்டுகளாக மின்னும் நட்சத்திரமாக ஜொலித்து வந்த பிரபல நடிகர் காரிகூப்பர் காலமானார். புற்றுநோயால் அவரது நிலை அபாயகரமாய் இருந்தது. சாகும்போது அவருக்கு வயது 60. காரி கூப்பர், நீதிபதி ஒருவரின் புதல்வராகும்.

விளம்பரங்களில் பெண்கள் படம்

ஆசிரியைகள் ஆட்சேபம்

ஜலந்தர், மே 14

விளம்பரங்களில் பெண்களின் படங்களை வெளியிடுவதை ஆசிரியைகள் ஆட்சேபித்துள்ளனர்.

பெண்களின் படங்களை ஆபாசமாகவும், அருவருக்கத்தக்க விதமாவும் விளம்பரம்செய்வது பற்றி பங்கா என்னுமிடத்திலுள்ள ஆசிரியைகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். ஆபாசப்படங்களைக் கண்டித்தும் ஆசிரியைகள் கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யானையின் அட்டகாசம்

திருச்சூர், மே 14

இங்குள்ள ஒரு கோயில் யானைக்கு மதம் பிடித்ததன் விளைவாக, மக்கள் பெரிதும் பீதியில் ஆழ்ந்துவிட்டனர்.

பிரதான வீதிகளில் மூன்று மணி நேரமாக வெறிகொண்டு ஓடிய இந்த யானை, கோயிலின் பெருங்கதவு, இரண்டுரயில்வே கேட்டுகள், ஒரு ரிக்ஷா உட்பட, பல வீடுகளின் முன்சுவர்களையும் இடித்துத் தூளாக்கியது.

ரூ. 500 தண்டம்

கொச்சிக்கடை, மே 14

வென்னப்புவையிலுள்ள மொகொத்தி முல்லையில், 60 போத்தல்கள் கொண்ட வடிசாராயத்துடன் இரண்டு பெரிய வடித் தளபாடங்களையும், வென்னப்புவநிலையத்தைச் சேர்ந்த கலால் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

வடிசாராயம் வைத்திருந்ததற்காக பி. ஏ. ஆர். குணசேனா என்பவருக்கு நீதிபதி திரு. சில்வா செல்லையா ரூ. 500 குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

'நல்ல எண்ணங்களை வளர்ப்போம்'

சரஸ்வதி சுவாமிகள் அருளுரை

"எந்த மனிதனும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருப்பதையே பார்க்கின்றோம். ஆசைதான் இதற்குக்காரணம். ஆசைநிறைவேறுவிட்டால் கோபம் வருகின்றது. நிறைவேறாத ஆசை குரோதமாக மாறுகின்றது. குணங்களுக்கேற்ப எண்ணங்கள் உண்டாகுமென்பதை கீதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது." இவ்வாறு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மதுரையில் பக்தகோடிகளுக்குக் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

நமது உணவைப்பொறுத்தே நல்ல, அன்றேல் கெட்டகுணங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தேகம் பகவான்வசிக்கும் ஆலயம். பகவான் வசிக்கும் இந்த ஆலயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். கண்ட உணவுகளை உட்கொண்டால் கெட்ட எண்ணங்கள் உண்டாகும். உறைப்பு, புளிப்பு குறைவாக இருப்பது சாத்வீக ஆகாரம். சுத்தமான இடத்தில்ஏற்ற காலத்தில் சாப்பிட்டால் சாத்வீககுணங்கள் ஏற்படும். காரம் கோபத்தை உண்டாக்கும். புளிப்பை அதிகமாகச் சேர்த்தால் சோம்பேறித்தனம் உண்டாகும். ஆகார விஷயத்தைச் சரியான முறையில் கொண்டு வந்தால் கெட்ட எண்ணங்கள் ஏற்படமாட்டா.

நீண்டகாலம் உயிருடன் இருக்கப்போகின்றோம் என நினைத்துக்கொண்டு நாங்கள் கருமம் ஆற்றுகின்றோம். "உயிர் உடலை விட்டு நீங்குவது ஆச்சரியமல்ல. உயிர் உடலுள் இருப்பதுதான் ஆச்சரியம்" இவ்வாறு கவிஞர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

முன்னர் பிறவி யெடுத்தது தெரியாது. அடுத்த பிறவி கிடையாதென்பது நிச்சயம் என மற்றோர் கவிஞர் சொன்னார். முற்பிறப்பிற் கடவுளைச் சேவிக்கவில்லை. தர்மம் செய்யவில்லை. இப்பிறவி எடுத்ததால் முற்பிறப்பில் இவை செய்யவில்லையெனத் தெரிகின்றது. ஆகவே அடுத்த பிறவி கிடையாதென்றார் கவி. எனவே நல்ல எண்ணங்களை இப்போதே வளர்த்துக்கொண்டால் பின்னர் நமக்குச் சிரமமில்லை.

ராஜாஜியின் சேவை

சென்னை, மே 13

"இராமாயணம்," "பாரதம்" ஆகிய இருபெரும் காப்பியங்களை திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியார் இனிய தமிழில் எழுதி தேசத்துக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கின்றார்." இவ்வாறு இந்தியாவின் உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

இராஜாஜியின் இந்த இரு நூல்களையும் தெலுங்கில் திரு. வி. காளிதாஸ் வெளியிட்டுள்ளார். இப்பிரதிகளை திரு. இராஜகோபாலாச்சாரியாருக்கு வழங்கும்போதுதான் இந்தியாவின் உதவி ஜனாதிபதி இராஜாஜியின் பயன்கருதாப் பணியைப் பெரிதும் பாராட்டினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"சகலவிதமான அபிவிருத்திகளும் அறத்தின் அடிப்படையில் ஏற்படவேண்டுமென்பதை மகாபாரதம் எமக்குப் போதித்துள்ளது. மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரு நூல்களின் உட்பொருள்களை உணர்ந்தவர்கள் உலகில் ஒழுக்க வாழ்வையும் தார்மீகத்தையும் மேம்படச் செய்வார்கள். இன்று உலகம் தியாகம், சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளைப் பெரிதும் வேண்டிநிற்கின்றது. கடந்தகாலத்துப் பெருமையை இவை எமக்கு எடுத்துரைக்கின்றன.

யாழ்ப்பாணம் ஆணையாளர் தகராறின் எதிரொலி

உபமான்யப் பிரேரணை எதிர்நோக்கியுள்ளது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையில் சென்ற மாத இறுதியில் நடைபெற்றுத் தற்காலிகமாக முடிவுகட்டப்பட்டிருக்கும் 'ஆணையாளர்கள் லடாய்'யின் எதிரொலி மாநகரசபையின் உபமான்யப் பிரேரணை ஒன்றை எதிர்நோக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மாநகரசபை ஆணையாளர்களான திருவாளர்கள் ஏ. வி. சின்னையா, கே. சண்முகம் ஆகிய இருவரும் இம்மாநகரசபையில் ஒரே சமயத்தில் கடமையாற்றியமை வாசகர்கள் அறிந்ததே. இதன் விளைவாக திரு. சின்னையாவின் சம்பளத்துடன் திரு. சண்முகத்துக்கு 14 நாட்களுக்கான சம்பளத்தைக் குறிப்பிட்ட மாநகரசபை கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த 14 நாட்களுக்கான சம்பளத்தை அவருக்குக் கொடுக்குமாறு ஸ்தலஸ்தாபனக் கமிஷன் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உத்தரவிட்டுள்ளது.

இப்பணத்தை ஒதுக்குவதற்குப் பட்ஜட்டில் பணம் இல்லாதபடியால் இதற்கான ஓர் உபமான்யப் பிரேரணையை யாழ்ப்பாணம் மாநகரசபை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியிருப்பதால் இதனை இச்சபை செய்து முடிக்குமா என்ற கேள்வி பலரிடையேயும் எழுந்திருக்கிறது.

கடந்த ஏப்ரல் முதலாந் திகதி மாநகரசபைக் கமிஷனர் திரு. சின்னையாவை நுவரெலியாவுக்கு இடமாற்றஞ் செய்யும் உத்தரவு வந்ததெனினும் அவர் செய்து கொண்ட ஆட்சேபத்தின்மீது ஜூன் மாதம் முதலாம் திகதிவரை ஒத்திபோடப்பட்டிருந்தது. இதுபற்றி மாநகரசபையும் இவ்வருட இறுதிவரையிலாவது அவரை இடமாற்ற வேண்டாமென்ற கோரிக்கையை விடுத்திருந்தது. இதனைப் பரிசீலனை செய்வதாக ஸ்தலஸ்தாபன கமிஷன் சபைக்கு அறிவித்திருந்தது.

ஆனால் சென்ற 26-ம் திகதி நுவரெலியாவுக்கு திரு. சின்னையாவைப் போகுமாறு 24-ந் திகதி ஓர் உத்தரவு அவருக்குக் கிடைத்தது. போதிய அவகாசம் கொடுக்கப்படாததும் மேயர் இங்கில்லாததும் இருப்பதைக் காட்டி அந்த உத்தரவை அவர் திரும்பவும் ஆட்சேபித்திருந்தார். இதற்கிடையில் திரு. சண்முகம் 26-ந் திகதி யாழ்ப்பாணம் மாநகரசபைக் கமிஷனராக வந்திருந்தார். ஆனால் இம்மாற்றங்கள் மாற்றப்பட்டு திரு. சண்முகத்தைக் காலிக்குப் போகுமாறும் இம்மாதம் 15-ந் திகதிவரையும் கட்டாய லீவில் இருக்குமாறும் ஸ்தலஸ்தாபன கமிஷன் அறிவித்திருந்தது. இக்காலத்தில் இவர்கள் இருவரும் ஒரே காலத்தில் இம்மாநகரசபையில் கமிஷனர்களாக இருந்திருக்கிறார்கள் எனச் சொல்லப்படுகிறது.

இந்தக் கமிஷனர்கள் பிரச்சினையினால் ஒரே காலத்தில் இரு கமிஷனர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டியும் இதற்கான உபமான்யப் பிரேரணையொன்றை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் இம்மாநகரசபைக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

வசதி குறைந்த ஆஸ்பத்திரி

அக்கரைப்பற்று, மே 14

நிந்தவூர், பொத்துவில் ஆகிய இரு நிலையங்களையு முடைய அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் அதற்குத் தேவையான தளபாடங்களும், மற்றும் பல வசதிகளும் இல்லாதது பெரும் குறையாக இருந்துவருகின்றது.

ஆஸ்பத்திரியில் 18 படுக்கைகள் மட்டுமே இருப்பதால் சயரோக நோயாளர் உட்பட எல்லா நோயாளர்களும் ஒன்றாகவே சேர்க்கப்பட்டுள்ளனர்

மோட்டார் விபத்தில் மூவர் படுகாயம்

மன்னார், ஞாயிறு

இங்கு நடைபெற்ற மோட்டார் விபத்தொன்றில் 3 பேர் படுகாயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெற்றிலைஏற்றிக்கொண்டு மீரிகமத்திலிருந்து வந்த ஒரு வான் பரவைக்கடலில் விழுந்ததன் காரணமாய் அதிலிருந்த நால்வரில் மூவர் படுகாயமடைந்தனர். நாலாமவர் சிறிது காயங்களுடன் தப்பினார். பொலிசார் விசாரணைநடத்திவருகின்றனர்.

தொடாந்துவ, மே 14

ரத்கம பரவைக்கடலில் தற்சமயம் மீன்கள் குறைந்திருப்பதால், மீன்பிடித்தொழிலை நம்பி வாழும் 200 மீன்பிடிக் குடும்பங்கள் பெருத்த கஷ்டத்துக்குள்ளிருக்கின்றனர்.

"அங்கவீனர்களுக்கு வேலை அளிக்கநிர்ப்பந்திக்கும் சட்டம்"

சீக்கிரம் கொண்டுவரப்படும்

கொழும்பு, ஞாயிறு

பெரிய வர்த்தக ஸ்தாபனங்களில், அங்கவீனர்களை வேலைக் கமர்த்த நிர்ப்பந்திக்கும் சட்டம் ஒன்று சீக்கிரம் கொண்டு வரப்படும். எனத் தெரிகிறது.

சமூக சேவை டைரக்டர் அங்கவீனர் சட்டத்தின் கீழ் இது சம்பந்தமான சட்டங்களைத் தயாரித்து வருவதாயும் இச்சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவான அங்கவீனர்களை வேலைக் கெடுத்துக்கொள்ளும்படி உத்தரவிடும் அதிகாரம் அவருக்கிருக்கும் எனத் தெரிகிறது.

பெருந்தொகையான ஊழியர்களை வேலைக் கமர்த்தியிருக்கும் ஸ்தாபனங்களின் விஷயத்தில் இச்சட்டம் பெரும்பாலும் பொருந்தும்.

"இதர நாடுகளில் இவ்வித சட்டம் அமுலில் இருப்பதாயும், குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்புள்ள அங்கவீனர்கள் விஷயத்தில் முக்கியமாக இச்சட்டம் பிரயோகிக்கப்படும்" என்றும் சமூக சேவா இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

பலவந்தமாக முத்தமிட்டார்

பொலிஸ்நிலையத்தில் நடந்தது

இரண்டு மாணவர்களை இரண்டு மாணவிகள் பலவந்தமாக ஒரு பொலிஸ் நிலையத்தில் வைத்து முத்தமிடச் செய்தது பற்றிய கேள்வியொன்றை இவ்வாரத்தில் நடைபெறும் பார்லிமெண்ட் கூட்டத்தில், கௌரவ எம். பி. திரு. சந்திரசிறி, பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பார்லிமெண்ட் காரியதரிசியைக் கேட்பார்.

குறிக்கப்பட்ட அம்மாணவிகள் வீட்டுக்குள்ளிருந்து கொண்டு ஐந்து மாணவர்களுடன் பேசிக்கொண்டிருந்ததைத் தொடர்ந்தே, அவ்விரு மாணவிகளும் அந்த இரு மாணவர்களை முத்தமிட்டனராம். பொலியந்தல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. செனிவரத்தினா அம்மாணவ மாணவிகளை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தாரென்றும் இப்பொலிஸாரின் நடத்தையைக் கண்டித்து பார்லிமெண்ட் காரியதரிசி உடனடியாக ஒரு விசாரணை நடத்துவாரா என்றும் திரு. சந்திரசிறி கேட்பார் எனத்தெரிகிறது.

ஸ்ரீமதி மொட்வானி தாயகம் செல்கிறார்

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீமதி கிளாரா மொட்வானி தாம் பிறந்த நாடான அமெரிக்காவில் பல்கலைக் கழகப் பதவி ஒன்றை ஏற்குமுகமாகச் செல்கிறார். இலங்கையில் 27 வருடம் ஆசிரியத்தொழில் புரிந்து செல்லும் அவருக்கு, கொழும்பு ஜி. ஓ. எச். ஹோட்டலில் ஒரு பிரிவுபசாரவிருந்து நடத்தப்பட்டது.

ஸ்ரீமதி மொட்வானி 23 வது வயதில், தன் இந்தியக்கணவருடன் இந்தியா செல்லும் வழியில் இலங்கை வந்தார்.

அமெரிக்க பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த இவர், கலைத்துறையில் பட்டம் பெற்றவர். விஸாக வித்தியாலயத்தின் அதிபராக அவரை பௌத்த தலைவர்கள் நியமித்தனர். 15 வருடங்கள் அவர் அப்பதவியில் இருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் பெண்கள் ஹிந்து கல்லூரியிலும், கொழும்பு மாலியஸ் கல்லூரியிலும் அதிபராய்க் கடமையாற்றினார். பின் பௌத்த பெண்கள் கல்லூரியை ஸ்தாபித்தார்.

லற்றின் அமெரிக்காவுக்கு மகாராணி விஜயம்

லண்டன் மே 14

அடுத்த வருடத்தில் எலிசபெத் மகாராணியார், லற்றின் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வார் என நம்பத்தகுந்த சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எலிசபெத் மகாராணி லற்றின அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

தேர்தல் ஒத்திவைப்பு

மன்னார், ஞாயிறு

இவ் வருடம் ஜூன் மாதம் 30ந் திகதியளவில் நடைபெற வேண்டிய கிராமச் சங்கத்து தேர்தல் யாவும் 1962ம் வருடத்துக்கு தலத்தாபன மந்திரியாரால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பெண்ணின்றி அவஸ்தைபடும்கர்ப்பவதிகள்

மட்டக்களப்பு, மே 14

நாவற்காடு மருத்துவ விடுதியில், சென்ற இரண்டரை வருடகாலமாக மருத்துவப்பெண் இல்லாததினால், இங்கு வரும் அநேக கர்ப்பவதிகள்சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் தத்தளிக்கும் நிலையில் இருந்து வருகின்றனர்.

இதன் காரணமாக, இங்கு வரும் கர்ப்பவதிகள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குச்செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் ஒரு பெண் அவசரமாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருந்தது. இது காரணமாக அவரை எடுத்துச் செல்வதற்கு "அம்புயலன்ஸ்" அழைக்கப்பட்டது. ஆனால் அந்த "அம்புயலன்ஸ்" அம்பாரைக்கு அனுப்பப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்தது.

ஆஸ்பத்திரி ஆலோசனை கமிட்டியின் அங்கத்தவரொருவர் இந்நிலைபற்றிக் கூறிய போது, ஒரு மருத்துவ விடுதியில், மருத்துவப்பெண் இல்லாதது, பெரிய அவதூறான நிகழ்ச்சியாகும் என்றார்.

3000 க்கதிகமான துர்ப்பாக்கிய குழந்தைகள்

கொழும்பு, ஞாயிறு

நாட்டில் 3000 க்கதிகமான பாடசாலைக்குச் செல்லத்தக்க வயதானகுழந்தைகள், செவிடு, ஊமை அல்லது குருடாக இருப்பதாகவும் இவற்றில் 10 ல் ஒரு குழந்தை மட்டுமே அரசாங்கம் அல்லது இதர வகைகளில் கவனிக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

முழு சமூகத்தினருக்கும் உரித்தாகட்டும்

கட்டுநாயக்கா, மே 14

"சமூகத்தின் சிறுபகுதியினரால் மட்டும் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்த பாடசாலைகளை நீக்கி, அவைகளை முழு சமூகத்தினருக்கும் அளிப்பதே, பாடசாலைகளை அரசாங்கம் எடுத்ததின் கருத்தாகும்". இவ்வாறு கட்டுநாயக்கா மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையின் வெள்ளிவிழா பரிசளிப்பின் போது டாக்டர் ஆனந்த குருகே கூறினார்.

யாழ்ப்பாணத்தைப் 'பரீட்சை நிலையமாக்குக'

உடுப்பிட்டி, ஞாயிறு

வழக்கமாக ஆசிரியர் ஆலோசகர் தராதரப்பத்திர பரீட்சை வடமாகாணத்திலிருந்து மனுச்செய்வோருக்கு யாழ்ப்பாணமே பரீட்சைநிலையமாக இருந்தது. ஆனால் இவ்வாண்டு ஜூன் மாதம் 2ந் திகதி நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து குறைந்த தொகையினரே தோற்றுகிறார்களென்ற காரணத்தால் பரீட்சையதிகாரி யாழ்ப்பாண நிலையத்தை நீக்கிவிட்டு, அனுராதபுரத்தைப் பரீட்சை நிலையமாக்கியுள்ளார்.

உள்நாட்டு அமைச்சு 5 வயதுக்கும் 15 வயதுக்கும் இடையிலுள்ள இத்தகைய சகல பிள்ளைகளையும் கவனிக்க நடவடிக்கை எடுத்துவருகிறது

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

ரேடியோ

உங்கள் ரேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, ரேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.

"பெரும்பாடு நிவாரணி"

தாய்மாருக்கு ஒரு வரப்பிரசாதம். பெரும்பாடு, வெள்ளை இறைத்து நோயால் வருந்தும் தாய்க் குலத்தாருக்கு எட்டு நேர மருந்துடன் நிவாரணமளிக்க முடியும் என உத்தரவாதமளிக்கப்படுகிறது. நேரில் கலந்து ஆலோசிக்கவும். எட்டு நேர மருந்து ரூ. 10/- தான்.

விபரங்களுக்கு:

பொ. செல்லையா
"புற்றுநோய் நிபுணர்"
ஆயுர்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வீடு வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் (தட்டாதெரு) வீடு வாடகைக்கு இருக்கிறது

விபரங்கட்கு:

எஸ். கே. சேனாதிராசா
சேனாதிராசா நகை மாளிகை
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

குத்தகைக்கு காணி

வண்ணார்பண்ணை வடகிழக்கு ஆறுகால் மடத்தடியிலுள்ள, யாழ்ப்பாணம்-மானிப்பாய் ரோட்டிலிருந்து பிரிந்துசெல்லும் இரண்டாவது ஒழுங்கையிலிருக்கும் மூன்றாவது காணி, நெற்பரப்பு 31, தென்னை, பனை, இரு கிணறு உள்ள காணி குத்தகைக்கு எடுக்க விரும்புவோர், கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பட்டணத்திற்கு அருகாமையிலிருப்பதனால், பாற்பண்ணை, கோழிப்பண்ணை வைப்பதற்கு இது ஓர் உகந்த இடம்.

செ. இரத்தினசபாபதி,
இல. 6, டீல் பிளேஸ்,
கொழும்பு-3.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

திங்கள், 15-5-61

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர் 7-30 திரைஇசை 8-00 வீணை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள் 5-15 வி. கனகசுந்தரம்—வீணை 5-45 திரைஇசை 6 15 கிராம சஞ்சிகை 6-45 வாத்தியக் கோஷ்டி

இரவு 7-00 நேயர் விருப்பம் 7-30 டாக்டர் ஏ. சுந்தரலிங்கம் — பேச்சு 7-45 எஸ். பி. திருநாவுக்கரசு — பாட்டு 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய கீதங்கள் 10-00 ஒலிப்பதிவுகள்.

யானைகளைச் சுடக்கூடாது

சி. பி. டி, சில்வா உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

டெடுறுஓயாவில் ஒரு யானையைக்கூடச் சுடக்கூடாதென்று தாம் உத்தரவிட்டிருப்பதாக சபை முதல்வர் திரு. சி. பி. டி, சில்வா இன்று பிற்பகல் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்புப் பிரேரணைமீது கிளப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. சி. பி. டி, சில்வா மேலும் கூறியதாவது:—

டெடுறுஓயாவில் ஒரு யானையைக்கூடச் சுடக்கூடாதென்று நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த யானைகளைப் பிடிப்பதற்கு மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகளுக்கு முடியாது போனால் யானைகளைப் பொறிவைத்துப் பிடிப்பதில் அனுபவம்வாய்ந்த தனிப்பட்டவர்களுக்கு இலவச லைசன்ஸ் வழங்குவோம்.

போர்ச்சுக்கல் எதிர்க்கட்சியினரின் அறிக்கை

லிஸ்பன், மே 14

போர்ச்சுக்கலிலுள்ள எதிர்க்கட்சியினர் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டுமென்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் காலனிகளில் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கோரி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

போர்ச்சுக்கலில் பிரபல 68 தலைவர்கள் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அங்கோலாவில் போர்ச்சுக்கல் அரசாங்கம் போராடிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் எதிர்க்கட்சியினர் இவ்வித அறிக்கை விடுத்தது வருந்துதற்குரியதென்று சலாசர் அரசாங்கம் தெரிவித்தது

கதிரியக்க சக்தியை கண்டறியும் கருவி

ஜேர்மனியில் உபயோகிக்கப்படுகிறது

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்த ஆராய்ச்சிகள் நடைபெற்றுவரும் இச்சமயத்தில் மனித உடலில் கதிரியக்கச் சக்தி இருப்பதைக் கண்டறியும் கருவி மிகவும் உபயோகமானதாகும். இத்தகைய கருவி ஒன்று கார்ல்ஷ்ருகே என்ற ஜேர்மன் நகரில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதன் மதிப்பு 62,000 டாலர்.

மனிதகுல நன்மைக்காக அணுசக்தியை ஆக்க வேலைக்கு எப்படி எல்லாம் பயன்படுத்த முடியும் என்பதுபற்றி ஆராயப்பட்டு அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் கதிரியக்க கிரண வீச்சுள்ள பொருள்களைக் கையாள்வதற்கு முன் சில பாதுகாப்பு முறைகள் அனுசரிக்கப்பட வேண்டும். அன்றாடக் காரியங்களில் இப்பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது மிக முக்கியமாகும். கார்ல்ஷ்ருகேயிலுள்ள மேற்கு ஜேர்மன் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தில் மனித உடலில் இருக்கக்கூடிய கதிரியக்க சக்தியை உடனே கண்டுபிடித்துத் தெரிவிக்கக்கூடிய அபூர்வக் கருவி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவியுடன் கூடிய திரையில் விழக்கூடிய கிரணங்களைக் கொண்டு பரிசோதிக்கப்படுபவர் புலால் உணவு உட்கொள்பவரா அல்லது மரக்கறி உணவு உட்கொள்பவரா என்பதைக் கண்டுபிடித்துவிட முடியுமாம். பரிசோதனைக்குள்ளாகுபவர் கைக்கடிகாரம் அணிந்திருந்தால் அதையும் அக்கருவி உணர்த்துகிறதாம். மிகமிகநுணுக்கமானதும் தீங்கே விளைவிக்காததுமான கதிரியக்கச் சக்தி உடம்பில் காணப்பட்டாலும் அதனைக் கண்டறிந்து இக்கருவி உணர்த்திவிடும். அந்தச் சக்தி ரேடியம், தோரியம், ஸ்டிரோன்ஷியம் ஆகியவைகளில் எதைச் சேர்ந்தது என்பதையும் கண்டுபிடித்து விடலாம்.

மனித உடலில் கதிரியக்க சக்தியைக் கண்டுபிடித்து உணர்த்தும் கருவிகள் உலகிலேயே 5 தான்உள. பல நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் பல ஆண்டுகள் செய்த ஆராய்ச்சிகளின் பலனாக இக்கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 62,000 டாலர். இக்கருவியைக் கதிரியக்க கிரணம் பாதிக்காமல் தடுக்க கதிரியக்க கிரணம் பாதிக்காத இரும்புத் தகடுகளால் இதற்கு மூடி செய்யப்பட்டுள்ளது. இத்தகடுகள் அழிக்கப்பட்ட பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் 'வான்கார்ட்'டின் உலோகத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

இக்கருவி ஒருவரைப் பரிசோதிக்கும் நேரம் இரண்டு நிமிஷம்தான். அதன்பின் இக்கருவியிலிருந்து வெளிவரும் அச்சிடப்பட்ட அட்டையில் கதிரியக்கச் சக்தி உடலில் இருந்தால் அதைப்பற்றி சகல விவரங்களும் அடங்கியிருக்கும். மனித குல சேவைக்கு இக்கருவி செய்யும் சேவை ஒப்பற்றதாகும்.

அபின் கடத்தலில் ஒரு நூதனமுறை!

இந்தூர், மே 14

பம்பாய் ஆக்ரா வீதியில் இரண்டு வாலிபர்கள் பிரமாதமான உடைகளுடன் போய்க் கொண்டிருந்த சமயம், அவர்கள் மீது சுங்க இலாகா உத்தியோகஸ்தர்கள் சந்தேகப்பட்டு, அவர்களின் உடைகளைக் களைந்து சோதனை போட்டார்கள்.

இச் சோதனையின் போது, அவர்களது உடம்பில் ரூ. 20,000 பெறுமானமுள்ள அபின் பூசப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர். இதை அவர்கள் மிகுந்த சிரமத்துடன் எண்ணெய் போட்டுச்சுரண்டி எடுத்தார்கள்.

இப்படியான தந்திரவழி மூலம், வருடக்கணக்கில் இவர்கள் கள்ளக்கடத்தல் செய்து, பெரும் பணக்காரர்களாகி விட்டதாக கருதப்படுகிறது.

அமெரிக்க அதிகாரிகளின் சொத்துகியூபாவில் பறிமுதல்

ஹவானா, மே 14

கியூபாவிலுள்ள அமெரிக்க தரைப்படை அதிகாரிகளின் சொத்துக்களை கியூபா அரசாங்கம் பறிமுதல் செய்துள்ளது. இதனால் வங்கிகளில் இருந்த பத்துலட்சம் டாலர் சொத்து பறிமுதல் செய்யப்பட்டு விட்டது.

சிறந்த கிராமஊழியர்

புதுடில்லி, மே 14

லூதியானா வட்டாரவளர்ச்சி பகுதியைச் சேர்ந்த 40 வயதுள்ள திரு. ரகுவீர்சிங் மந்தார் என்பவர் "1960-1961-ம் ஆண்டின் சிறந்த கிராம ஊழியர்" என்று தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 2,500 கொண்டபரிசை சமுதாய அபிவிருத்தி கூட்டுறவு இலாகா மந்திரி திரு. கே. டேயிடமிருந்து பெற்றுள்ளார்.

குரங்கு போன்ற குழந்தை

மொத்த விரல்கள் 24!

சீர்காழி, மே 14

பொறையார் லோகல்பண்டு ஆஸ்பத்திரியில் அலமேலு என்ற இளம்பெண் குரங்கு போன்ற உருவமான ஒரு பெண் குழந்தையைப் பெற்றிருக்கின்றாள்.

இந்த அதிசயக் குழந்தைக்கு காலிலும் கையிலும் மொத்தம் 24 விரல்கள் உள்ளன.

ஜேப்படி பள்ளிக்கூடம்

பாங்காக், மே 13

இங்குள்ள ஒரு வீட்டை நகர பொலிஸ்காரர்கள் திடீரென்று சோதனை போட்டதில் அவ்வீடு, ஜேப்படித் திருடர்களுக்கும், சங்கிலித்திருடர்களுக்கும், வேறும் சில்லறைத் திருட்டுகள் செய்பவர்களுக்குமான ஒரு "பள்ளிக்கூடம்" என்பதை கண்டுகொண்டனர்.

பரீட்சை முடிவு பத்திரங்களில் கவனக்குறைவு?

உடுப்பிட்டி, ஞாயிறு

வியாழனன்று பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை முடிவுப் பத்திரங்கள் சிலவற்றில் சரித்திரப் பாடத்திற்குத் தோன்றிய சில மாணவரின் முடிவுகள் குறிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட பாடசாலைத் தலைமையாசிரியர் இதுவிஷயமாகப் பரீட்சையதிகாரிக்கு பதிவுத் தபால்மூலம் அறிவித்துள்ளனர்.

சதா சகாயமாதா திருநாள்

மன்னார், ஞாயிறு

5000 க்கு அதிகமான யாத்திரிகர்கள் தென் இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்து வந்து 'மண்டபத்திலுள்ள குவாரண்டைன் காம்பிலுள்ள சதா சகாயமாதாவின் திருநாளைக் கொண்டாட வந்திருந்தனர். கோயில் பலவர்ண மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மின்சாரதீபம் ஜோதிமயமாக்கியது.

நோவனை வேஸ்பாயாவும் முடிந்த மறுநாட்காலை தங்கச்சிமடத்துப் பங்குக் குரவரான வண. பிதா எம். குழந்தைசாமி பாடற்பூசை வைத்துப் பிரசங்கம் செய்தார்.

இலவச விருந்துடன் யாத்திரிகர்கள் கோயிற்தரிசனம் செய்தனர்.

அமெரிக்க விவசாயப் போட்டியில் இலங்கை—இந்திய மாணவர்கள்

சன்பிரான்ஸிஸ்கோ, மே 14

அமெரிக்காவில் ஆசிய மாணவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட விவசாயப்போட்டியில் இலங்கை மாணவி செல்வி சாந்தி இராணி டி. அப்றூ பாராட்டப்பட்டுள்ளார், அமெரிக்க பல்கலைக்கழகங்களிலுள்ள ஆசிய மாணவர்களுக்காக வெளியிடப்படும் வாரப் பத்திரிகை 'ஆசிய மாணவன்' இப்போட்டியை ஒழுங்கு செய்தது.

சர்வதேச கல்வி ஸ்தாபனம் வழங்கிய உபகாரச் சம்பளம் பெற்று இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் செல்வி சாந்தி பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் உடற்பயிற்சி விரிவுரையாளராவார்.

இந்த வியாசப் போட்டியில் இந்திய மாணவர் உஜாவாலா சால்வ் முதலாவது இடத்தைப் பெற்றார்.

நீதிபதிகள் தெரிவுசெய்த பத்து வியாசங்களில் ஐந்து இந்திய மாணவர்களின் வியாசங்களும் இலங்கை உட்பட அப்கானிஸ்தான், கொரியா வியாசங்களும் பாராட்டுப் பெற்றது.

---

18 வயதுப் பெண் தற்கொலை

பருத்தித்துறை, ஞாயிறு

பொலிகண்டியைச் சேர்ந்த சின்னையா மகள் தங்கம்மா என்னும் 18 வயதுப் பெண்பிள்ளை பொலிடோர் அருந்தியதால் மரணமடைந்தார் என அறிவிக்கப்படுகிறது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. தம்பிப்பிள்ளை மரண விசாரணையை நடத்தினார். திருமணப் பேச்சுக்களில் ஏற்பட்ட அதிருப்தியே மரணத்துக்குக் காரணமென்று கூறப்பட்டது.

தற்கொலை மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

தொழிலாளி தற்கொலை

பருத்தித்துறை, ஞாயிறு

துன்னாலை தெற்கு கந்தன் செல்லையா என்னும் சீவல் தொழிலாளி சமூத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக தெரியவருகிறது.

நீண்டநாட்களாக நோயால் அவஸ்தைப்பட்டதே அவரது தற்கொலைக்குக் காரணம் என கூறப்பட்டது.

நாற்பது வயதுடைய மேற்படி நபரின் மரணவிசாரணையின்பின் திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என தீர்ப்பளித்தார்.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.